# SEPTEMBER 2014 - 2015
# வணிகவியல் / COMMERCE
# www.kalvikural.com

நேரம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 X 1 = 15

1. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுவது :
   (அ) தனி வணிகம் (ஆ) இந்து கூட்டுக்குடும்பம் (இ) கூட்டுறவு சங்கம் (ஈ) கூட்டாண்மை
2. ஒரு பன்னாட்டு நிறுமம் ____________ என அழியக்கப்படுகிறது.
   (அ) உலக அளவில் பெரியது (ஆ) கூட்டாண்மை (இ) கூட்டுறவுச் சங்கங்கள் (ஈ) பொதுக் கூட்டுரு
3. தனியாள் வணிகத்தில் முடிவெடுப்பது :
   (அ) விரைவாக (ஆ) தாமதமாக (இ) இரண்டுமில்லை
4. தனியாள் வணிக அமைப்பிற்கு ஏற்றத் தொழில்கள்
   (அ) பேரளவு வியாபாரம் (ஆ) நடுத்தர வியாபாரம் (இ) சிற்றளவு வியாபாரம்
5. கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்தல்
   (அ) 1949 சட்டம் (ஆ) 1956 சட்டம் (இ) 1932 சட்டம்
6. __________ 1907 ஆம் ஆண்டு ஆங்கிலேய கூட்டாண்மைச் சட்டம் இயற்றப்பட்டு கூட்டாண்மை அமைப்பு துவங்கப்பட்டது :
   (அ) இந்தியாவில் (ஆ) ஜெர்மனியில் (இ) இங்கிலாந்தில் (ஈ) இத்தாலியில்
7. எந்த விகிதமும் உடன்பாட்டில் இல்லையென்றால் கூட்டாளிகள் இலாப நட்டத்தை __________ பங்கீட்டுக் கொள்கிறார்கள்.
   (அ) செலுத்திய முதலின் அடிப்படையில் (ஆ) சமமாக
   (இ) நிர்வாகத் திறமை அடிப்படையில் (ஈ) இவை எதுவுமில்லை
8. தனி வரையறை நிறுமம் இதனைப் பெற்றவுடன் தொழில் தொடங்கலாம்
   (அ) தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் (ஆ) தொழில் தொடக்கச் சான்றிதழ்
   (இ) பதிவாளரிடமிருந்து தான் தேர்ந்தெடுத்துள்ள நிறுமப்பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்
   (ஈ) பதிவாளரிடம் நிறும அமைப்பிற்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர்
9. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநில சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?
   (அ) பட்டய (சாசன) நிறுமம் (ஆ) அயல்நாட்டு நிறுமம் (இ) அரசு நிறுமம் (ஈ) சட்டமுறை நிறுமம்
10. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்.
    (அ) 90 நாட்கள் (ஆ) 100 நாட்கள் (இ) 130 நாட்கள் (ஈ) 60 நாட்கள்
11. ஒரு இயக்குநர் :
    (அ) நிறுமத்தின் முகவராக (ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக
    (இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக (ஈ) மேற்சொன்ன அனைத்துமாகச் செயலாற்றுகிறார்.
12. நிறுமச் செயளர் ஒருவர் நியமிக்கப்படுவது :
    (அ) அரசால் (ஆ) இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால் (இ) இயக்குநர் அவையால்
    (ஈ) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால்
13. பொது வரையறு நிறுமத்தில் ஒட்டு மொத்த மேலாண்மை ஊதியம் :
    (அ) நிகர இலாபத்தில் 11 விழுக்காட்டை (ஆ) செலுத்தப் பெற்ற முதல் மற்றும் பொதுக் காப்பிடுப்புத் தொகையில் 11 விழுக்காட்டை (இ) நிகர இலாபத்தில் 5 விழுக்காட்டை
    (ஈ) செலுத்தப் பெற்ற முதல் மற்றும் பொதுக் காப்பிடுப்புத் தொகையில் 5 விழுக்காட்டை
14. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை :
    (அ) பொது விடுப்புகள் (ஆ) விற்பனைக்கான தருமொழி (இ)மேலாண்மைத் தரகர்கள்
    (ஈ) ஒப்புறுதியளித்தல்
15. பத்திரங்கள் ஒப்பந்த ( ஒழுங்கு படுத்துதல் ) சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது.
    (அ) 1952 (ஆ) 1956 (இ) 1964 (ஈ) 1966
16. எச்சரிக்கையான ஊக வணிகர் ___________ எனப்படுவார்.
    (அ) கலைமான் (ஆ) காளை (இ) முடவாத்து (ஈ) கரடி

KALVIKURAL

17. கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவது :
(அ) கிராமங்களில் மட்டும் (ஆ) கிராமங்களிலும் நகரங்களிலும்
(இ) பெரு நகரங்களில் மட்டும் (ஈ) நகர்ப் புறங்களில் மட்டும்
18. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு :
(அ) இங்கிலாந்து (ஆ) அமெரிக்கா (இ) சுவிஸ் (ஈ) இந்தியா
19. அரசு நிறுமம் இவற்றின் கீழ் பதிவு செய்யப்படுகிறது.
(அ) மைய அல்லது மாநில அரசின் தனிச் சட்டம் (ஆ) இந்திய நிறுமச் சட்டம், 1956
(இ) அரசாணை (ஈ) அரசியலமைப்புச் சாசனம்
20. அரசுத் தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு :
(அ) துறைவாரி அமைப்பாகும் (ஆ) பொதுக் கழகமாகும்
(இ) அரசு நிறுமமாகும் (ஈ) கூட்டுப் பங்கு நிறுமமாகும்.

## II. <u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u>

21. ஒப்படைவு என்பது __________ என்பதாகும்.
22. தனியாள் வாணிகத்தின் உரிமையாளரின் பொறுப்பு ____________.
23. வங்கித் தொழில் அல்லாத பிறத் தொழிலுக்கு அதிக பட்ச உறுப்பினரின் எண்ணிக்கை _________.
24. நிறுவனத்தில் பங்கேற்காத கூட்டாளியை ___________ என்று அழைக்கிறோம்.
25. கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாடு ____________ வடிவிலோ அல்லது _________ வடிவிலோ இருக்கலாம்.
26. ______________ வயதைப் பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம்.
27. ஒரு பொது வரையறை நிறுமத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை ____________.
28. ஒரு நிறுமத்தில் செலுத்தப்பெற்ற பங்கு முதலில் 51 விழுக்காட்டுக்கு குறையாமல் ஒரு மாநில அரசு வைத்திருக்குமேயானால் அது ____________ நிறுமம் ஆகும்.
29. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக்கொள்ளத் தேவையில்லாத நிறுமம் ___________ நிறுமமாகும்.
30. தனிவறையறு நிறுமத்தில் குறைந்தது ___________ இயக்குநர்களாவது இருக்க வேண்டும்.
31. நிறுமத்தின் முதலாவது இயக்குநர்கள் வழக்கமாக ___________ல் பெயரிடப்பட்டிருப்பர்.
32. சட்ட முறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் _________ நாட்களுக்கு முன்னராவது அனுப்பிவைக்க வேண்டும்.
33. பொதுவாக தணிக்கையர் __________ கூட்டத்தில் நியமிக்கப்பட்டு ஊதியமும் நிர்ணயிக்கப்படும்.
34. கடன் பத்திரங்கள் ___________ உரிமையைக் குறிக்கும் .
35. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடப்பெறச் செய்வது ___________ எனப்படும்.
36. போல்ட் என்பது _______ பங்குச் சந்தையில் உபயோகத்தில் உள்ள ஒரு நேரடி வணிக முறையாகும்.
37. கோவாப்பெரரி என்ற இலத்தீன் மொழியின் பொருள் ________________.
38. கூட்டுறவு சங்கத்தின் முக்கிய குறிக்கோள் உறுப்பினர் _______________.
39. அரசுத் தொழில்களின் முதன்மையான நோக்கம் _______________.
40. _____________ ஒரு சிலரிடம் பொருளாதார வலிமை செரிவதைத் தடை செய்கிறது.

## பகுதி - ஆ

<u>எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.</u> 10 X 4 = 40

41. அமைப்பு - வரையறு:
42. வாரிய அமைப்பின் பொருள் தருக.
43. தனியாள் வாணிக அமைப்பு என்றால் என்ன ?
44. உழையாக் கூட்டாளி என்பவர் யார் ?
45. கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு என்றால் என்ன ?
46. தனி வறையறு நிறுமம் - வரைவிலக்கணம் தருக.
47. பங்குகளை வட்டத்தில் வெளியிடுதல் என்றால் என்ன ?
48. சட்ட முறைக்கூட்டம் என்றால் என்ன ?
49. மாற்று இயக்குநர் என்பவர் யார் ?

50. பத்திரம் என்றால் என்ன ?
51. பங்கு மாற்றகத்தின் வரைவிலக்கணம் தருக.
52. இராக்குடேல் முன்னோடிகள் என்பவர் யார்?
53. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன ?
54. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம் ?
55. பொதுக் கூட்டுருவிற்கு ( பொதுக்கழகம் ) நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

## பகுதி - இ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 5 X 8 = 40

56. இந்து கூட்டுக்குடும்பம் பற்றி விவரி.
57. கூட்டாண்மை நிறுவனத்தில் இளவரின் நிலைப்பற்றி விவரி.
58. செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள் யாவை ?
59. நிறும அமைப்பு முறையின் சிறப்புத் தன்மைகளை சுருங்கக் கூறுக.
60. சட்ட முறை அறிக்கையில் காணப்பெற வேண்டியவை யாவை ?
61. ஊகவணிகர்களின் வகைகளை விவரி.
62. கூட்டுறவு சங்கத்தின் குறைபாடுகளில் ஏதேனும் எட்டினை விவரி.
63. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்குமுள்ள வேறுபாடுகளில் ஏதேனும் எட்டினை அட்டவணைப் படுத்துக.

## பகுதி - ஈ

**அனைத்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4 X 20 = 80

64. (அ) பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளில் ஏதேனும் ஐந்தினைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

( அல்லது )

(ஆ) துறைவாரி அமைப்பின் இயல்புகளையும் நிறை குறைகளையும் விளக்குக.

65. (அ) சமுதாயத்தில் தனியாள் வணிகரின் பங்கினை விவரி.

( அல்லது )

(ஆ) சிறுகுறிப்பு வரைக : (i) குறைவெண் (ii) நிகழ்ச்சி நிரல் (iii) பகராள் (iv) நிகழ்ச்சிக் குறிப்பேடு.

66. (அ) கூட்டாண்மை நிறுவனம் களைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

( அல்லது )

(ஆ) செபியின் நோக்கம், இயல்புகள், பணிகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குக.

67. (அ) ஏதேனும் எட்டு கூட்டுறவுச் சங்கங்களின் வகைகளை எழுதுக.

( அல்லது )

(ஆ) பங்குகளுக்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி.

---- O o O ---

KALVIKURAL